<u>**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.**</u>

<u>**சி.சி. 44/2015**</u>

<u>அ.சா.7 திருமதி.லதா, மனுவின் பெயரில் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>

07.10.2014 அன்று மதியம் 01.00 மணிக்கு வாதி புகார் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர் சம்பவயிடம் சென்றேன். சாட்சிகள் சின்னதாயி, மல்லிகா, சுப்பிரமணி ஆகியோர் வாதியின் குடும்ப நபர்கள் என்றால் சரிதான். மேற்படி புகார்தாரரின் குடும்ப நபர்கள் என்பதால் அவர்கள் புகார்தாரருடன் வந்ததால் அவரிடம் நான் கையெழுத்து வாங்கி கொண்டேன் என்றாலும் நான் அவர்களை சம்பவயிடம் சென்று விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் பார்வை மகஜரிலும், வரைப்படத்தையும் காவல் நிலையத்தில் வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. சமூக நலத்துறையினர் தன்னுடைய விசாரணை அறிக்கையில் இவ்வழக்கில் வரதட்சணை கொடுமை எதுவும் இல்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி புகார்தாரர் கூறியுள்ளதை போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அவர் கொடுத்த பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் எதிரிகளின் மீது இவ்வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் இருந்து கொண்டே ஒரு பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாருக்கு வாதி அழைத்து வந்த சாட்சிகளை வைத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.